உள்ளம் போல் உற்றுழி உதவும்
புள்இயல் கலிமா உடைமை யான.

## 5. பொருளியல்

1141 இசை திரிந்து இசைப்பினும் இயையுமன் பொருளே
அசை திரிந்து இயலா என்மனார் புலவர்.

1142 நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமங் கண்ணிய மரபிடை தெரிய,
எட்டன் பகுதியும் விளங்க, ஒட்டிய
உறுப்புடையது போல், உணர்வுடையது போல்,
மறுத்துரைப்பது போல், நெஞ்சொடு புணர்ந்தும்
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்,
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்,
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரியவாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத்து இருவர்க்கும் உரிய பால் கிளவி.

1143 கனவும் உரித்தால் அவ்விடத் தான.

1144 தாய்க்கும் உரித்தால் போக்குடன் கிளப்பின்.

1145 பால் கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே.

1146 நட்பின் நடக்கை ஆங்கலங்கடையே.

1147 உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய.

1148 வண்ணம் பசந்து புலம்புறு காலை
உணர்ந்த போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையில் புணர்க்கவும் பெறுமே.

1149 உடம்பும் உயிரும் வாடியக் காலும்
என் உற்றன கொல் இவை எனின் அல்லது
கிழவோன் சேர்தல் கிழத்திக்கு இல்லை.

1150 ஒரு சிறை நெஞ்சோடு உசாவுங்காலை

உரியதாகலும் உண்டென மொழிப.
1151 தன்வயின் கரத்தலும் அவன்வயின் வேட்டலும்
அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்
மடனொடு நிற்றல் கடன்என மொழிப.
1152 அறத்தொடு நிற்கும் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப.
1153 எளித்தல், ஏத்தல், வேட்கை உரைத்தல்,
கூறுதலுசாஅதல், ஏதீடு, தலைப்பாடு,
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ் எழுவகைய என்மனார் புலவர்.
1154 உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்
அப்பொருள் வேட்கைக் கிழவியின் உணர்ப.
1155 செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான.
1156 பொழுதும் ஆறும் காப்பும் என்று இவற்றின்
வழுவினாகிய குற்றங் காட்டலும்,
தன்னை அழிதலும், அவன் ஊறு அஞ்சலும்,
இரவினும் பகலினும் நீவா என்றலும்
கிழவோன் தன்னை வாரல் என்றலும்
நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்
புரைபட வந்த அன்னவை பிறவும்
வரைதல் வேட்கைப் பொருள என்ப.
1157 வேட்கை மறுத்துக் கிளந்தாங்கு உரைத்தல்
மரீஇய மருங்கின் உரித்தென மொழிப.
1158 தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப.
1159 உண்டற்குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே.
1160 பொருளென மொழிதலும் வரைநிலை இன்றே
காப்புக் கைமிகுதல் உண்மையான.
1161 அன்பே அறனே இன்பம் நாணொடு
துறந்த ஒழுக்கம் பழித்தன்றாகலின்
ஒன்றும் வேண்டா காப்பினுள்ளே.
1162 சுரமென மொழிதலும் வரைநிலை இன்றே.
1163 உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்
வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குக் கடனே.

1164 அறக் கழிவுடையன பொருட்பயம்படவரின்
வழக்கென வழங்கலும் பழித்தன்று என்ப.
1165 மிக்க பொருளினுள் பொருள் வகை புணர்க்க
நாணுத் தலைப்பிரியா நல்வழிப் படுத்தே.
1166 முறைப்பெயர் மருங்கின் கெழுதகைப் பொதுச்சொல்
நிலைக்குரி மரபின் இரு ஈற்றும் உரித்தே.
1167 தாயத்தின் அடையா, ஈயச்செல்லா,
வினைவயின் தங்கா, வீற்றுக் கொளப்படா,
எம் என வரூஉம் கிழமைத் தோற்றம்
அல்ல வாயினும் புல்லுவ உளவே.
1168 ஒருபாற் கிளவி ஏனைப்பால் கண்ணும்
வருவகை தானே வழக்குஎன மொழிப.
1169 எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்.
1170 பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரிபு இன்று அஃது என்மனார் புலவர்.
1171 ஒருதலை உரிமை வேண்டினும், மகடூஉப்
பிரிதல் அச்சம் உண்மையானும்,
அம்பலும் அலரும் களவு வெளிப்படுக்கும் என்று
அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்
நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்
போக்கும் வரவும் மனைவிக் கண் தோன்றும்.
1172 வருத்த மிகுதி சுட்டுங் காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்.
1173 மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய.
1174 நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியில்
புகழ்தகை வரையார் கற்பினுள்ளே.
1175 இறைச்சி தானே பொருள் புறத்ததுவே.
1176 இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே.
1177 அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே.
1178 செய்பொருள் அச்சமும் வினைவயின் பிரிவும்
மெய்பெற உணர்த்தும் கிழவி பாராட்டே.
1179 கற்பு வழிப்பட்டவள் பரத்தை ஏத்தினும்

உள்ளத் தூடல் உண்டுஎன மொழிப.
1180 கிழவோள், பிறள்குணம் இவைஎனக்கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்.
1181 தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்
மெய்ம்மையாக அவர்வயின் உணர்ந்தும்
தலைத்தாள் கழறு அறம் எதிர்ப்பொழுது இன்றே
மலிதலும் ஊடலும் அவை அலங்கடையே.
1182 பொழுது தலைவைத்த கையறு காலை
இறந்த போலக் கிளக்குங் கிளவி
மடனே, வருத்தம், மருட்கை, மிகுதியோடு,
அவை நாற்பொருட்கண் நிகழும் என்ப.
1183 இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்
வாய்மை கூறலும், பொய்தலைப் பெய்தலும்
நல்வகையுடைய நயத்திற் கூறியும்
பல்வகையானும் படைக்கவும் பெறுமே.
1184 உயர்மொழிக் குரிய உறழுங்கிளவி
ஐயக்கிளவி ஆடுஉவிற் குரித்தே.
1185 உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்
உரியதாகும் தோழிகண் உரனே.
1186 உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே.
1187 வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின்று உரிய தத்தம் கூற்றே.
1188 உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு எனக்
கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே.
1189 அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.
1190 மங்கல மொழியும், வைஇய மொழியும்,
மாறில் ஆண்மையின் சொல்லிய மொழியும்,
கூறியல் மருங்கின் கொள்ளும் என்ப.
1191 சினனே, பேதைமை, நிம்பிரி, நல்குரவு,
அனைநால் வகையும் சிறப்பொடு வருமே.
1192 அன்னை என்னை என்றலும் உளவே
தொன்நெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்
தோன்றா மரபின என்மனார் புலவர்.
1193 ஒப்பும், உருவும், வெறுப்பும் என்றா,

கற்பும், ஏரும், எழிலும் என்றா,
சாயலும், நாணும், மடனும் என்றா,
நோயும், வேட்கையும், நுகர்வும் என்றாங்கு
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்டலாகாப் பொருள என்ப.

1194 இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்
அவையில் காலம் இன்மையான.